மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.

முன்னிலை: செல்வி.எஸ்.டி.ஆயிஷ்பேகம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் நாள் திங்கள்கிழமை

அசல் வழக்கு எண்: 64/09

ராஜேந்திரன், த/பெ கந்தசாமி,
விளந்தை கிராமம்,
உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம். - வாதி

/எதிர்/

தமிழ்நாடு அரசு பிரதிநிதியாக
1) மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர்
2) கோட்டாட்சித்தலைவர் (வருவாய்)
உடையார்பாளையம் தாலுக்கா, அரியலூர் மாவட்டம்.
3) அ.அந்தோணிசாமி, த/பெ அருள்ஞானபிரகாசம்,
கூவத்தூர் கிராமம், உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம்.

- பிரதிவாதிகள்

WEB COPY

வாதியின் நிம்மதியான அனுபவத்தில் உள்ள தாவா சொத்துக்களில் 3ம் பிரதிவாதி நேரடியாகவோ, தன் ஆட்கள் மற்றும் முகவர்கள் மூலம் எந்த வகையிலும் தலையிட்டு இடையூறு செய்யாதவண்ணம் 3ம் பிரதிவாதிக்கு எதிராக சாசுவத நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவும், வாதிக்கு அறிவிப்பு கொடுக்காமல் சட்ட விதிமுறைகளை பின்பற்றாமல் உரிமைக்கும், அனுபவத்திற்கும் விரோதமாக ஏற்பட்டுள்ள புல எண் 263/7A உட்பிரிவு நடவடிக்கைகளை ரத்து செய்து வாதியின் கிரய உரிமைப்படி வருவாய் ஆவணங்களை உட்பிரிவு ஏற்படுத்திட செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கவும், தாவா செலவுத் தொகை பிரதிவாதிகளிடமிருந்து வாதிக்கு கிடைக்கவும் வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

| | | |
|---|---|---|
| வழக்குரை நாள் | - | 18.03.2009 |
| வழக்கு மூலம் ஏற்பட்ட நாள் | - | 5.11.2008, 17.11.2008 மற்றும் 05.01.2009 |
| இடம் | - | ஆண்டிமடம் கிராமம்,<br>உடையார்பாளையம் தாலுக்கா,<br>அரியலூர் மாவட்டம். |

நீதிமன்ற முத்திரைக் கட்டணத்திற்கும், அதிகார வரம்பிற்கும் தாவா பொறுமானம் ரூ.1000/- இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் சட்டம் பிரிவு 27(சி)-ன் படி நீதிமன்ற முத்திரைக் கட்டணமாக ரூ.75.50/- செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு இன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.எஸ்.எம்.அன்புமொழி, அவர்கள் ஆஜராகியும் பிரதிவாதிகள் D1 & D2 தோன்றா தரப்பினராகவும், D3 தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.என்.ராமஜெயலிங்கம் அவர்கள் ஆஜராகியும் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

WEB COPY

## <u>தீர்ப்பாணை</u>

வாதியின் தவறுகை காரணமாக இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

செலவுத்தொகை பட்டியல் தாக்கல் செய்யவில்லை.

## <u>சொத்து விபரம்</u>

அரியலூர் பதிவு மாவட்டம், ஆண்டிமடம் சப்.டி. ஆண்டிமடம் கிராமம்

1) அ.பு.ரீ. சர்வே எண் 263/7A 0.07.5 ஏர்சில் பட்டணங்குறிச்சி செல்லும் கீழ்மேல் ரோட்டுக்கு (தெ) எங்களால் விடப்பட்ட 5 அடி அகலம் 109 அடி நீளம் உள்ள தென்வடல் பொது பாதைக்கும் (மே) வள்ளியம்மை வகையறா மனைக்கும் (கி) திருஞானவகை 253-7பி 2 மனைக்கும் (வ) இதில் கீழ்மேல் ஜாதியடி 13, தென்வடல் ஜாதியடி 196க்கு 2548 சதுரடி உள்ள காலி மனையும்,

2) 263/7A 0.07.5 ஏர்சில் மேற்கண்ட மனைக்கும் (கி) 5அடி அகலம் 109 அடி நீளம் உள்ள பொது பாதைக்கும், அந்தோணிசாமி கிரைய மனைக்கும் (தெ) திருஞானம் முருகேசன் வகையறா, வள்ளியம்மை, தண்டபாணி மனைக்கும் (வ) வள்ளியம்மை, தண்டபாணி மனைக்கும் (புல எண் 263-7பி-3க்கும் அருள்ஞானபிரகாசம் மனை 263-7பி-1க்கும் (மே) இதில் கீழ்மேல் ஜாதியடி வடபுறம் 22, தென்புறம் 26, தென்வடல் ஜாதியடி 87, இதற்கு சதுரடி 2088 உள்ள காலி மனையும் சேர்ந்து அயிட்டம் இரண்டுக்கும் கூடுதல் 4636 சதுரடி காலி மனை.

2016ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

WEB COPY

(ஓம்)செல்வி.எஸ்.டி.ஆயிஷ்பேகம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.